# விழுப்புரம் நகராட்சி

**2020–ம் ஆண்டு ஜூன் மாதம் 30–ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.40 மணிக்கு** விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற "**சாதாரண கூட்ட**" நடவடிக்கைகள்.

**முன்னிலை :–** **ந.தட்சணாமூர்த்தி,** பி.காம்.,
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## மன்றப்பொருள்

**1.** விழுப்புரம் நகராட்சி பகுதியில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கு பயன்படுத்த இயலாத நிலையிலும், 2011–ல் நகராட்சியுடன் புதிததாக இணைக்கப்பட்ட ஊராட்சி (Added Area) பகுதிகளில் உள்ள சாலைகள் பழுதடைந்து போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லாததாலும் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகளை ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (IUDM 2020–21) மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | நீளம் கி.மீ | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.3,7,27 மற்றும் 41 வடிவேல் நகர் விரிவாக்கம் கிருஷ்ணா நகர், செல்வா நகர், செந்தில் நகர், பாரதி நகர், 3–வது தெரு, 4–வது தெரு, 5–வது தெரு மற்றும் 6–வது தெரு, மஞ்சு நகர், அபிராமி தெரு, ஹவுசிங்போர்டு ரோடு, சாமி நகர் மற்றும் அஜித் கார்டன் ஆகிய தெருக்களுக்கு புதிய தார்சாலை மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி. | 1.94 km (1940m) | 100.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் சாலை பணிகள் 100.00 இலட்சம் மதிப்பீட்டில் IUDM 2020–21 திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம் மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு திட்ட பிரேரணை சமர்ப்பிக்கலாம்.

(4070/2020/இ1)

**2.** விழுப்புரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்பட்டு வரும் நிலையில் பாதாள சாக்கடை பராமரிப்பிற்காக பிரதான குழாய் பாதையில் போடப்பட்டுள்ள ஆள்இறங்கும் தொட்டியின் மூடுகவர் ஆங்காங்கே சாலை மட்டத்திற்கு மேலும், கீழுமாக இருப்பதால் வாகன போக்குவரத்து நலம் மற்றும் பொதுமக்களின் உயிர் சேதம் தவிர்க்கும் பொருட்டு பாதாள சாக்கடை ஆள்இறங்கும் தொட்டியினை சாலையின் மட்டத்திற்கேற்ப சரிசெய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களது முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4426/2020/இ3)**

**3.** விழுப்புரம் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு (COVID-19) கொரோனா வைரஸ் தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நவீன ஆட்டோமேடிக் காலால் மிதித்து இயந்திரம் (Touch Free Dispenser Machine) மூலம் சானிடைசர் வழங்குவதற்கு ஏழு இயந்திரம் விநியோகம் செய்யும் பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 05.05.**2020** விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விவரம் | Touch Free Dispenser Machine (1+GST) ரூ |
|---|---|---|
| 1 | 33 Traders, East pondy road Villupuram. | **3500/–** |
| 2 | Globe Carbon Industries, Panruti Road, Kumbakonam. | **4500/–** |
| 3 | Sakthi Murugan Enterprises, 469A, Yeashaa sree towers, Devanatha Swamy Nagar, Pondicherry. | **5250/–** |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் அதனை தொடர்ந்து குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள 33 Traders, East pondy road Villupuram அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(2116–17/2020/எச்1)**

**4.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**14** நாயக்கன் தோப்பில் அமைந்துள்ள காமராஜர் நகராட்சி ஆரம்பப்பள்ளி மற்றும் நுண்உர செயலாக்க மையத்தின் நுழைவு வாயிலில் சுற்றுச்சுவர் இல்லாமல் இருப்பதால், ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் இருக்கவும் மற்றும் இரவு நேரங்களில் சமுக விரோத செயல்கள் நடைபெறாமல் தடுத்திடவும், மேற்கண்ட இடத்திற்கு நுழைவு வாயிலில் சுற்றுச்சுவர் அமைப்பதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**6.70** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2925/2020/இ1)**

**5.** இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள திரு.காமராஜர் நகராட்சி மேல்நிலைப்பள்ளிக்கு இயற்பியல் ஆய்வகம் ரூ.**23.80** இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **18.03.2020–ல்** கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.M.ஆறுமுகம், ஒப்பந்ததாரர். | ரூ.23,09,971/– | 0.17% குறைவு |
| 2 | திரு.R.நாகராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.23,58,785/– | 1.94% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.M.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **0.17%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப் பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(1500/2020/இ1)**

**6.** இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள திரு.காமராஜர் நகராட்சி மேனிலைப்பள்ளியில் ரூ.**23.30** இலட்சம் மதிப்பீட்டில் வேதியியல் ஆய்வுக் கூடம் கட்டும் பணிக்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **18.03.2020**–ல் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.M.ஆறுமுகம், ஒப்பந்ததாரர். | ரூ.22,57,581/– | 0.14% குறைவு |
| 2 | திரு.R.நாகராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.23,00,879/– | 1.78% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.M.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **0.14%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப் பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(1501/2020/இ1)**

**7.** விழுப்புரம் நகராட்சியின் நூற்றாண்டு விழா கொண்டாடும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு **26.11.2019** அன்று சிறப்பு திட்ட நிதியின் கீழ் ரூ.**50.00** கோடிக்கு பணிகள் மேற்கொள்ள அடிக்கல் நாட்டு விழா தொடர்பாக மாலை தமிழகம் பத்திரிக்கையில் செய்தி வெளியிட்டமைக்கு ரூ.**25,200/–** தொகை கோரி கடிதம் வரப்பெற்றதையடுத்து தொகை வழங்கிடவும் மேலும் **16.08.2019** தேதியில் விழுப்புரம் நகராட்சி இரண்டாண்டுகள் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் சாதனைகள் மாலைத் தமிழகம் பத்திரிக்கையில் செய்தி வெளியிட்டமைக்கு ரூ.**14,700/–** வழங்க கோரி கடிதம் வரப்பெற்றமைக்கு தொகை வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(5144/2019/இ1)**

**8.** சாலையோர சிறு/குறு வியாபாரிகளுக்காக (Street Vendors) அரசு அரசாணை எண்.**159**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**02.11.2015** மற்றும் தமிழ்நாடு அரசின் எண்.**230**, நாள்.**02.11.2015**–ல் சாலையோர சிறு/குறு வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை முறைபடுத்துதல் திட்டம் பற்றிய துணை விதிகளை பிறப்பித்துள்ளது (Bye Laws) மேற்கண்ட அரசாணை மற்றும் துணை விதிகளை நகராட்சியின் அறிவிப்பு பலகையில் சாலையோர வியாபாரிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்கிற விளம்பரத்தை தினசரி நாளிதழில் வெளியிட ஆகும் செலவுத்தொகை தோராயமாக ரூ.**50,000/–** என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**9.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் JCB வாகன எண் TN32 D 2651 வண்டிக்கு வர்ணம் பூசியதற்கான டைனாடெக் , விழுப்புரம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி ரூ. 45,000/– ஐ வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்ட பணியினை அங்கீகரிக்கப்பட்ட பணிமனையின் மூலம் பழுது நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம் பொது சுகாதார நலன் கருதி மேற்கண்ட வாகனத்தை பழுது நீக்கம் செய்ய மேல் நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

(297/2020/எச்2)

**10.** விழுப்புரம் நகராட்சியின் நூற்றாண்டு விழா கொண்டாடும் பொருட்டு மாண்புமிகு தமிழக இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 வழுதரெட்டியில் உள்ள பொதுகழிப்பிடத்தின் கழிவுநீர் தொட்டி போதுமானதாக இல்லாததால் கழிவுநீரானது வெளியில் தேங்கி பொதுசுகாதாரகேடு விளைவிப்பதால், உடனடியாக தேவையான அளவிற்கு கழிவுநீர் தொட்டி கட்டுவதற்கும், மேலும் கழிப்பிடத்தினை பராமரிப்பு செய்வதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6.50 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4070/2020/இ1)

**11.** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் பகுதிகளில் பழுதடைந்த Manhole சரிசெய்தல், சாலையின் மேல்மட்டத்தைவிட பள்ளத்தில் உள்ள Manhole–களை சாலையின் மேல்மட்டத்திற்கு உயர்த்தும் பணிகளை மேற்கொள்ளவும், மழைக்காலமாக இருப்பதாலும் இப்பணி சுகாதாரத்தை உறுதி செய்யும் பணியாக இருப்பதாலும் அவசர அவசியத்தை கருதி நகராட்சிகளின் சட்ட பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு பணியினை செய்து முடித்தமைக்கு திரு.கே.ராஜா ஒப்பந்ததாரருக்கு ரூ.3,29,668/– செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம்.

(8252/2019/இ1)

**12.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, தக்கா தெருவில் உள்ள சாலை சேதமடைந்து குண்டும், குழியுமாக இருப்பதால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி சுகாதாரகேடு விளைவிக்கும் என்பதாலும், வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகள் நடப்பதற்கு சிரமமாக இருப்பதாலும் இத்தெருவிற்கு புதியதாக தார்சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.20 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம். (2925/2020/இ1)

**13.** விழுப்புரம் நகராட்சி–074, விழுப்புரம் சட்டமன்ற தொகுதி 1 முதல் 42 வார்டுகளிலுள்ள வாக்காளர்கள் தங்கள் பட்டியலில் விடுபட்டிருந்ததால் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தங்கள் மற்றும் முகவரி மாற்றம் செய்ய வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த சுருக்கபணி 2020 (SSR 2020) பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட ஆட்டோவில் விளம்பரம் செய்திட தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து விலைப்புள்ளி கோரியதில் 29.12.2019 அன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.

| **வ. எண்** | **விலைப்புள்ளிதாரர் பெயர் (ம) முகவரி விபரம்** | **விலை விகிதம் ஒருநாளைக்கு** |
|---|---|---|
| 1. | M/S. சிவா ஒலி, ஒளி சிஸ்டம் சர்விஸ்<br>நெ.11, பார்த்தசாரதி லே அவுட், விழுப்புரம். | 1975/– |
| 2. | M/S. அம்மன் சவுண்ட் சர்விஸ்<br>K.K. ரோடு, விழுப்புரம். | 1800/– |
| 3. | M/S. அம்மன் சவுண்ட் சர்விஸ்<br>திரு.வி.க. விதி, விழுப்புரம். | 2000/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைவாக வழங்கிய M/S. அம்மன் சவுண்ட் சர்விஸ், K.K. ரோடு, விழுப்புரம் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியை மன்றம் அங்கிகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கியதையும், பணிமேற் கொண்டதையும் மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(540/2019/C2)
“

**14.** இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரது மே 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம். ( / /சி1)

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**விழுப்புரம் நகராட்சி.**